IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 37/2023

Deposition of RW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 08.08.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | தினேஷ் | **Caste** | : | |
| **S/o.** | **:** | தனபால் | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :-**

நான் இந்த மனுவில் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | காப்பீடு சான்றிதழ் நிபந்தனைகளுடன் | |

**மனுதாரர் குறுக்கு விசாரணை**

மனுதாரர் அமர்ந்து சென்ற வாகனத்தின் பதிவு எண். TN 52 S 1474 என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் காப்பீடு அமலில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான் அது ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் அஜக்ரதையாக ஓட்டி சென்றதால்தான் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் விபத்தை ஏற்படுத்தியதால் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க எங்கள் நிறுவனம் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

ஒம்/–தினேஷ்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/– R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.